DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 55/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : **விஜயபிரகாஷ்** (P.w.8)

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day of February 2026

(1வது எதிரி ஆஜர் இல்லை. மற்றொரு எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது ).

**முதல் விசாரணை :–**

**நான் திருச்சுழியில் குடியிருந்து வருகிறேன். நான் மெக்கானிக் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. மற்ற இரண்டு எதிரிகளையும் எனக்கு தெரியாது. கடந்த 2012ம் வருடம் நான் இரு சக்கர வாகனத்தில் காரியாபட்டியில் திருச்சுழிக்கு வந்து கொண்டிருந்தேன். திருச்சுழி போலிசார் மூலக்கரைப்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே மதியம் 1மணியளவில் என்னை நிற்கச் சொல்லி திருட்டு சம்பந்தமாக விசாரணைக்கு வந்திருப்பதாகவும் நாங்கள் அங்கு வந்ததற்காக கையொப்பம் வாங்கிச் சென்றார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல்**

வாக்குமூலங்களிலும், அத்தாட்சிகளிலும் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த வாணிகருப்பு என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் அதசாஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). (**அந்த சிவபிரகாசம் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் அதசாஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).(**அந்த வாணிகருப்பு என்பவரின் அத்தாட்சியில் உள்ள 2வது கையொப்பம் அதசாஆ5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). (**அந்த சிவபிரகாசம் என்பவரின் அத்தாட்சியில் உள்ள 2வது கையொப்பம் அதசாஆ6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அ.த.கு.வி :–**

கடந்த 07.11.2015ம் தேதியன்று நானும் எனது ஊரைச் சேர்ந்த சத்தியமூர்த்தி என்பவரும் காரியாபட்டி சென்றுவிட்டு திருச்சுழி வருவதற்கு மதியம் 2.55மணியளவில் இரு சக்கர வாகனத்தில் மூலக்கரைப்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே வந்து கொண்டிருந்தபோது திருச்சுழி காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் வழக்கின் சம்பந்தபட்ட வாணிகருப்பு என்பவரை கைது செய்து எங்கள் முன்னிலையில் அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார் என்றும் அதன்பிறகு மாலை 5.00மணியளவில் சிவபிரகாசம் என்ற சிவா என்பவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 06.30மணியளவில் அதே இடத்தில் சிவபிரகாசம் என்பவரிடமிருந்து பல்சர் TN 59 AL 1242 என்ற வாகனத்தையும் ரூ.6000/–த்தையும் எங்கள்

முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்றும் இரவு 9.00மணியளவில் மூலக்கரைப்பட்டி பேருந்து நிறுத்தத்திற்கும் தொட்டியன்குளம் பேருந்து நிறுத்தத்திற்கும் இடையே உள்ள சிறிய பாலத்தின் அடியில் இருந்து 20மீ அலுமினியம் மின்கம்பியை வாணி கருப்பு என்பவர் ஆஜர் செய்ததை எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்றும் அந்த வாக்குமூலங்கள் மற்றும் அத்தாட்சிகளில் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எ.த.கு.வி –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 55/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : சோணை (P.w.7)

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day of February 2026

(1வது எதிரி ஆஜர் இல்லை. மற்றொரு எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. ).

**முதல் விசாரணை :–**

நான் மைலியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பத்தை கடந்த 2015ம் வருடம் மதியம் 3.00மணியளவில் திருச்சுழி வருவதற்காக மைலி பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தேன். காரேந்தலுக்கு தண்ணீர்விடும் தண்ணீர் தொட்டிற்கு அருகே கூட்டமாக இருந்தது. அருகில் ஆடு மேய்க்கும் புளியங்குளத்தைச் சேர்ந்த மணிகண்டன் என்பவர் அருகில் இருந்தார். அப்போது திருச்சுழி போலிசார் வழக்கின்

சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும் மணிகண்டன் என்பவரும் கையொப்பம் செய்தோம். (**அந்த பார்வை மகஜர் அசாஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி–**

நான் கையொப்பம் போட்ட தேதி எனக்கு தெரியாது என்றால் சரிதான். பார்வை மகஜர், வரைபடம் என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. போலிசார் கையொப்பம் போடச் சொன்னதால் நான் செய்தேன், அதில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 55/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : செல்வம் (P.w.6)

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day of February 2026

(1வது எதிரி ஆஜர் இல்லை. மற்றொரு எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :–**

நான் புளியங்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 10 வருடத்திற்கு முன்பு இரவு 9.00மணி வரை தண்ணீர் பாய்ச்சி விட்டு இரவு வீட்டிற்கு சென்று சாப்பிட்டு தூங்கிவிட்டேன். மறுநாள் காலை 6.00மணியளவில் கரண்ட் வரவில்லை. மைலி சோணையா கோவில் அருகே உள்ள மின்கம்பங்களை

நானு எனது அய்யா பாண்டியும் சென்று பார்த்தபோது 6 மின்கம்பங்களில் மின் வயர்களை காணவில்லை. திருச்சுழியில் உள்ள மின்வாரியத்திற்கு காலை 10.00மணியளவில் தகவல் சொன்னனே். 10 நாட்கள் கழித்து மின்வயர்களை சரிசெய்து கொடுத்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி–

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கரண்ட் எத்தனை மணிக்கு துண்டிக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மறுநாள் காலையில் எத்தனை மணிக்கு தெரியும் என்றால் காலை 6.00மணிக்கு மோட்டார் போடும்போது தெரியும். கரண்ட் இல்லை என்ற விபரத்தை நான் யாரிடம் போனில் சொன்னேன் என்றால் நேடியாக இ.பி அலுவலகம் சென்று சொன்னேன். தகவல் சொன்னவுடன் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தார்கள். நான் புகார் அளிக்கும்போது உடன் செல்லவில்லை. புகார் மனுவில் என்ன எழுதி உள்ளது என்று எனக்கு தெரியாது. காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க யார் யார் சென்றார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ நடந்து புகார் கொடுத்தவுடன் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரித்தார்களா என்றால் என்னிடமும் எனதுஅய்யா பாண்டியிடமும் விசாரித்தார்கள். எவ்வளவு நீளமுள்ள மின்வயர் காணவில்லை என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் பார்க்கும்போது 6 மின்கம்பங்களில் மின்வயர்களை காணவில்லை. எந்த திசையில் இருந்து எவ்வளவு நீளமுள்ள மின்வயர்கள் காணவில்லை என்றால் மேற்கில் இருந்து கிழக்கே செல்லும் மின்வயர்களை காணவில்லை. மின்கம்பங்கள் ரோட்டின் ஓரமாக செல்கிறது என்றால் ஆமாம். எனக்கு சம்பவம் பற்றி

போலிசார் சொல்லிதான் தெரியும் என்றாலும் போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS
(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 55/2021**
Preliminary Register
Sessions
Deposition of witness for Prosecution

Defence

| | | |
|---|---|---|
| Name | : | அல்லாபாக்ஸ் (P.w.5) |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day of February 2026

(1வது எதிரி ஆஜர் இல்லை. மற்றொரு எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :–**

நான் காரேந்தலில் குடியிருந்து வருகிறேன். நான் பைக் மெக்கானிக் தொழில் செய்து வருகிறேன். கடந்த 2011–2016ம் வருடம் வரை பள்ளிமடம் பஞ்சாயத்து துணை தலைவராக இருந்தபோது கடந்த 2012–2014வருடத்திற்குள் காரேந்தல் நீர்தொட்டி அருகே நான் விவசாயம்

செய்து வருகிறேன். எனது தோட்டத்தில் மோட்டார் ஓடாததால் நான் காலை 8.00–9.00மணியளவில் 1500மீ துூரத்திற்கு மின்வயர்களை காணவில்லை. நான் சென்று நேரில் பார்த்தேன். அதன்பிறகு உதவி மின்பொறியார் புகார் கொடுத்த ஒரு வாரத்தில் மின்வயர்களை சரிசெய்து விட்டார்கள். மினவயர்களை யார் எடுத்தார்கள் என்று நான் கேட்டுத் தெரிந்து கொள்ளவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி–**

சம்பவ சமயத்தில் நான் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வயர் திருடுபோனது சம்பந்தமாக நான் யாரிடமாவது தகவல் சொன்னேனா என்றால் செல்போனில் உதவி மின்பொறியாளரிடம் தகவல் சொன்னேன். உதவி மின்பொறியாளர், வயர்மேன் அனைவரும் வந்தார்கள். சம்பவ இடத்தில் போலிசார் யார் யாரிடம் விசாரணை செய்து வாக்குமூலங்கள் வாங்கினார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும்போது நான் உடன் செல்லவில்லை, புகார் மனுவில் என்ன எழுதி உள்ளது என்று எனக்கு தெரியாது. மின்வயர்களின் மதிப்பு என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மின்கம்பங்களில் வயர் காணவில்லை என்று நான் தகவல் சொன்னேனா என்றால் ஆமாம். எத்தனை மின்கம்பங்களில் வயர் காணவில்லை என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு சம்பவம் பற்றி தெரியாது என்றாலும் ஊராட்சி மன்ற துணைத்தலைவர்

என்பதால் போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 55/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : கருப்பையா (P.w.4)

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 9th day of February 2026

(1வது எதிரி ஆஜர் இல்லை. மற்றொரு எதிரி ஆஜர் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :–**

நான் கொக்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை பார்த்து வருகிறேன். கடந்த 2012ம் வருடம் தேதி மாதம் ஞாபகமில்லை ஒரு நாள் நான் எனது ஊரில் இருந்தபோது காரேந்தல் கிராமத்தில் தண்ணீர் திறந்துவிடும் முருகன் என்பவர் தண்ணிர் வரவில்லை என்றும் கரண்ட் வரவில்லை என்றும் காலை 10.00மணியளவில் இரு சக்கர வாகனத்தில் ஏறி வந்து என்னிடம் நேரில் வந்து கூறினார். நானும் அவரும் மோட்டார் இருக்கும் இடத்திற்கு சென்றபோது அதன் அருகில் இருந்த 4 மின்கம்பங்களில் மின்வயர்களை

காணவில்லை. அதன்பிறகு இந்த தகவலை வயர்மேனுக்கு சொன்னோம். ஒரு வாரம் கழித்து மின்வாரிய அதிகாரிகள் மின்வயரை சரிசெய்து தண்ணீர் வருவதற்கு ஏற்பாடு செய்தார்கள் . போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

சம்பவ சமயத்தில் நான் தான் ஊராட்சி மன்ற தலைவர் என்றால் சரிதான். கரண்ட் இல்லை என்று எனக்கு எத்தனை மணிக்கு தெரியும் என்றால் 9.30மணி முதல் 10.30மணிக்குள் தெரியும். கரண்ட் இல்லை என யாரிடம் தகவல் சொன்னேன் என்றால் வயர்மேனிடம் சொன்னேன். அவர் பெயர் எனக்கு தெரியாது. வயர்மேன் அவரது மேல் அதிகாரிகளுக்கு தகவல் சொன்னாரா என்றால் தகவல் சொன்னார். சம்பவ இடத்திற்கு யார் யார் சென்றோம் என்றால் நானும் , தண்ணீர் ஆபரேட்டரும் சென்றோம். சம்பவம் நடந்த மறுநாள் காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார் என்றால் வயர்மேன் புகார் கொடுத்தார். காணாமல் போன மின்வயர்களின் நீளம், மதிப்பு எவ்வளவு என்று என்னிடம் சொன்னார்களா என்றால் நான் அது பற்றி கேட்கவில்லை. காணாமல் போன மின்வயரை கண்டுபிடித்தது சம்பந்தமாக எனக்கு தெரியுமா என்றால் எங்களுக்கு வயர் போட்டு கரண்ட் வந்தது, கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் பற்றி தெரியாது. வயர்மேன் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்கும்போது நான் உடன் சென்றேனா என்றால் நான் செல்லவில்லை, சம்பவ நாளில் போலிசார் என்னை விசாரித்தார்கள். புகாரில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவ நடந்த இடம் தார் ரோடா அல்லது மண்ரோடா என்றால் தார்ரோட்டின் அருகில் தான் டிரான்ஸ்பார்ம் உள்ளது. ஊராட்சி மன்ற தலைவர் என்பதால் போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்கள் பொய் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.